நாள்: 02.07.2026
OP 37/2023
பெயர் கண்ணன்
ம.சா.1

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சின்னமனூர் காய்கறி மார்க்கடில் லோடு மேனாக வேலை பார்த்து வருகிறேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்பதை என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் திருமணம் காதல் திருமணம், எங்கள் பெற்றோர் திருமணத்தை ஏற்றுக் கொண்டார்கள். என் மனைவி வீட்டில் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்கள் திருமணம் 10.03.2006 ல் நடைபெற்றது. எங்களுக்கு 16.04.2011 ல் கபினேஷ் என்ற ஆண்குழந்தை பிறந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் நாங்கள் தனிக்குடித்தனமாக தான் வாழ்ந்து வந்தோம். நான் ஒத்திக்கு முருகேசன் வாத்தியார் இடம் இருந்து வீட்டை ஒத்திக்கு எடுத்தது சம்பந்தமாக ஆவண்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் நாங்கள் இருவரும் தான் ஒத்திக்கு எடுத்தோம்.

நான் என் மனைவிக்கு 3 பவுன் நகை வாங்கி கொடுத்ததை அவர் அடகு வைத்து ஆரடம்பரமாக செலவு செய்தார் என சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. மருத்துவ சிகிச்சைக்காக தான் நகை அடகு வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் மனைவி என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. நான் வேலைக்கு சென்ற போது என் மனைவி வீட்டை விட்டு வேலை தேடி வெளியில் சென்றுவிடுவார் என நான் சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. ஒத்திக்கு வாங்கிய வீட்டை என் மனைவி பெயருக்கு மாற்றி தரவேண்டும் என என்னிடம் பிரச்சனை செய்தார் என சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல.

எங்கள் திருமணத்தின் போது உத்தமபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்து அதற்கு மனு ரசீது கொடுத்தார் என்றால் சரியல்ல. கம்பம் வேலப்பர் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. என் மனைவிக்கு மூச்சுதிணறல் ஏற்பட்டு 1 மாதம் தேனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை செய்தார் என்றால் சரிதான். என் மனைவிக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் மனைவிக்கு அதிர்ச்சியான செய்தி சொன்னால் மூச்சுதினறல் ஏற்படும் என்றால் சரியல்ல. நான் தினமும் மது அருந்திவிட்டு என் மனைவியிடம் பிரச்சனை செய்ததால் அவருக்கு மூச்சுதினறல் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் வீட்டில் சாப்பிடமாட்டேன் என்றும், கேட்டால் உணவில் விசம் வைத்திருப்பதாக பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. என் மனைவி சமைத்து தயார் செய்த குழம்பை அவர் மீது ஊற்றி விட்டேன் என்றால் சரியல்ல. என் மனைவியை மண்ணெண்ணெய் ஊற்றி பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. நான் என் மனைவியின் பெற்றேர்களிடம் மனநல சிகிச்சை எடுக்க சொல்லி வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. என் மனைவியை யார் இடம் பேசகூடாது என செல்போனை பிடுங்கி கொண்டேன் என்றால் சரியல்ல.

என் மனைவி ஆரம்பர வாழ்க்கை செய்து வந்தார் என கூறியது பொய்யானது என்றால் சரியல்ல. நான் மது அருந்திவிட்டு, அடித்து என் மனைவியை வீட்டை விட்டு அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மது அருந்திவிட்டு என் மனைவியின் நகைகளை அடகு வைத்து செலவு செய்தேன் என்றால் சரியல்ல. என் மனைவி தீபாவளி அன்று என் மகனை பார்க்க வந்த போது, அவனுக்கு புதுஉடை, இனிப்பு என

வாங்கி வந்தபோது நான் அவரை பார்க்கவிடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு குச்சனூரில் 6 செண்ட் நிலம் இருந்தது. அதை விற்றுவிட்டேன். என் மனைவியின் கடனுக்கு விற்றுவிட்டேன். நான் 6 லட்சம் ரொக்க பணத்தை வைத்து சுகபோகமாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. நான் மனுவில் மனைவிக்கு எதிராக கூறிய குற்றச்சாட்டுகள் பொய்யானது என்றும், எனவே, என் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH Date: 2026.07.02 19:21:10 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்